**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம், வேதாரண்யம்.**

**முன்னிலை: திருமதி. G.சுதா, B.Sc., B.L.,**

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர்,

வேதாரண்யம்.

2026-ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 29- ஆம் நாள் திங்கட்கிழமை

திருவள்ளுவர் ஆண்டு 2058 ஸ்ரீ பராபவ வருடம் ஆனி மாதம் 15-ஆம் நாள்

**ஆண்டுப்பட்டிகை வழக்கு எண்.14/2024**

CNR. No: TNNG05-000062-2024

| | | |
|---|---|---|
| 1. | குற்றமுறையீட்டாளர் பெயர் | அரசுக்காக:<br>காவல் ஆய்வாளர்,<br>வேதாரண்யம் காவல் நிலையம்.<br>குற்ற எண்.365/2021. |
| 2. | எதிரிகள் | 1. தேசிங்கு,<br>த/பெ. முனியப்பன்<br>முத்துக்கவுண்டர்காடு, புஷ்பவனம்.<br>2. வீரமணி,<br>த/பெ. குப்புசாமி<br>முத்துக்கவுண்டர்காடு, புஷ்பவனம். |
| 3. | எதிரிகள் கைது செய்யப்பட்ட நாள் | எதிரிகள் தலைமறைவு கைதிகள் ஆவார்கள். |
| 4. | எதிரிகள் பிணையில் விடுவிக்கப்பட்ட நாள் | - |
| 5. | இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்ட நாள் | 21.12.2023 ஆம் தேதி இந்நீதிமன்றத்தில் குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்யப்பட்டு, |

SUDHA GANESAN Digitally signed by SUDHA GANESAN Date: 2026.06.29 16:13:28 +0530

| | | |
|---|---|---|
| | | 09.01.2024 ஆம் தேதி CC.No.14/2024 ஆக கோப்பிற்கு எடுக்கப்பட்டது. |
| 6. | கு.வி.மு.ச.பிரிவு 281-ன் கீழ் வனையப்பட்ட குற்றச்சாட்டுகள் குறித்து எதிரிகளிடம் கேட்கப்பட்ட நாள் | 06.04.2024 |
| 7. | வனையப்பட்ட குற்றச்சாட்டுகள் | எதிரிகளின் மீது பிரிவுகள் 4(1)(aaa), 4(1)(g)TNP Act- ன் கீழ். |
| 8. | எதிரிகளின் கோரிக்கை | பொய் வழக்கு, குற்றவாளிகள் இல்லை. |
| 9. | இவ்வழக்கில் கு.வி.மு.ச. பிரிவு 317 ன் கீழான மனுக்கள் நீங்கலாக இதர தாக்கல் செய்யப்பட்ட மனுக்கள் மற்றும் அவைகள் மீதான உத்தரவு, அது சம்பந்தான மேல் முறையீட்டு உத்தரவு | - |
| 10. | இவ்வழக்கில் விசாரணை செய்யப்பட்ட சாட்சிகளின் நாள் விபரம் | <table><tr><th>அரசு தரப்பு/ எதிரிகள் தரப்பு சாட்சிகள்</th><th>முதல் விசாரணை நாள்</th><th>குறுக்கு விசாரணை நாள்</th></tr><tr><td>அ.சா.1</td><td>22.04.2025</td><td>22.04.2025</td></tr><tr><td>அ.சா.2</td><td>08.06.2026</td><td>08.06.2026</td></tr><tr><td>அ.சா.3</td><td>16.06.2026</td><td>16.06.2026</td></tr></table> |
| 11. | நீதிமன்றத்தின் முடிவு | முடிவில், எதிரிகள் பிரிவுகள் 4(1)(aaa), 4(1)(g)TNP TNP Act- ன் கீழ் குற்றவாளிகள் இல்லை என தீர்மானிக்கப்பட்டது. |

| | | |
|---|---|---|
| 12. | தீர்ப்புரை | முடிவில், எதிரிகளுக்கு எதிரான பிரிவுகள் 4(1)(aaa), 4(1)(g)TNP TNP Act-ன் கீழான குற்றச்சாட்டுகளிலிருந்து கு.வி.மு.ச பிரிவு 248(1)-ன் கீழ் எதிரிகளை விடுதலை செய்து இந்நீதிமன்றத்தால் தீர்ப்பளிக்கப்பட்டது. |
| 13. | வழக்கு சொத்து குறித்த உத்தரவு | இவ்வழக்கு சம்பந்தமாக வழக்குச் சொத்துக்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை. எனவே, வழக்குச் சொத்துப்பற்றி உத்தரவு எதுவும் பிறப்பிக்கப்படவில்லை. |

இந்த ஆண்டுப்பட்டிகை வழக்கு 09.01.2024 ஆம் தேதியன்று இந்நீதிமன்ற கோப்பிற்கு எடுக்கப்பட்டு, இன்று 29.06.2026 ஆம் தேதியன்று என் முன்பு இறுதி விசாரணைக்கு வந்தபோது, அரசுத்தரப்பில் கற்றறிந்த அரசு குற்றத்துறை உதவி வழக்கறிஞர் அவர்கள் ஆஜராகியும், எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு. B. மதியழகன் அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதுரைகள் கேட்கப்பட்டு, சாட்சிய, சான்றாவணங்கள் பரிசீலனை செய்தும், இதுநாள்வரை இந்நீதிமன்ற கவனமாக பரிசீலனையில் இருந்துவந்தும், இன்று இந்நீதிமன்றம் வழங்கும் ...

## தீர்ப்புரை

கடந்த 13.06.2021-ம் தேதி 19.30 மணியளவில் இவ்வழக்கின் எதிரிகள் புஷ்பவனம் மாரியம்மன் கோவில் அருகில் எவ்வித அரசு அனுமதியோ, உரிமமோ இன்றி சுமார் 60 லிட்டர் பிடிக்கக்கூடிய இரண்டு பாலிதீன் பைகளில் தலா 55 லிட்டர்

வீதம் 110 லிட்டர் எரிசாராயத்தை வைத்திருந்தும், அதன் அருகில் சுமார் 100 லிட்டர் பிடிக்கக்கூடிய இரண்டு பிளாஸ்டிக் கேன்களில் தலா 95 லிட்டர் வீதம் வெல்லம், படிகாரகற்கள், கடுக்காய்தூள், பேரீச்சை போன்றவைகளை போட்டு நொதிக்க வைத்து சாராயம் காய்ச்சுவதற்காக எரிசாராய ஊறலை மண்ணில் புதைத்து வைத்திருந்து குற்றம் புரிந்துள்ளார்கள். எனவே எதிரிகள் சட்டப்பிரிவுகள் 4(1)(aaa), 4(1)(g) TNP Act-ன் படி தண்டிக்கத்தக்க குற்றம் புரிந்துள்ளதாக காவல் ஆய்வாளர், வேதாரண்யம் காவல் நிலையம் குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

2. அரசுத்தரப்பில் தாக்கலான இறுதி அறிக்கை உரிய பரிசீலனைக்கு பிறகு இந்நீதிமன்ற கோப்பிற்கு சட்டப்பிரிவுகள் 4(1)(aaa), 4(1)(g) TNP Act-ன் கீழ் எடுக்கப்பட்ட பின்னர், எதிரிகளுக்கு இந்நீதிமன்றத்தில் ஆஜராவதற்கான அழைப்பாணை வழங்கப்பட்டது. எதிரிகள் இந்நீதிமன்றத்தில் முன்னிலையானவுடன், எதிரிகளுக்கு அரசுத் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்காவணங்களின் நகல்கள் அனைத்தும் பிரிவு 207 கு.வி.மு.ச.வின் படி இலவசமாக வழங்கப்பட்டது. எதிரிகளுக்கு போதுமான கால அவகாசம் கொடுக்கப்பட்ட பின்பு அரசு தரப்பு வழக்கு ஆவணங்கள் பரிசீலனை செய்து, 1,2 வரையான எதிரிகளுக்கு எதிராக சட்டப்பிரிவுகள் 4(1)(aaa), 4(1)(g) TNP Act - ன் படி, குற்றச்சாட்டுகள் விளக்கி வினவ, பொய் வழக்கு என்றும், தாங்கள் குற்றவாளிகள் இல்லை என்றும் மறுத்துரைத்தார்கள்.

3. அரசு தரப்பு சாட்சிகள் விசாரணைக்கு உத்திரவிடப்பட்டு அரசு தரப்பில் 1 முதல் 3 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டு, 1 முதல் 8 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. எதிரிகள் தரப்பில் யாதொரு சாட்சியும் விசாரிக்கப்படவில்லை. சான்றாவணம் மற்றும் சான்று பொருட்கள் குறியீடு செய்யப்படவில்லை.

**4(1). அரசு தரப்பு சாட்சிகளின் சுருக்கம்** :

கடந்த 13.06.2021ம் தேதி மாலை 07.30 மணியளவில் வேதாரண்யம் காவல் நிலைய காவல் ஆய்வாளர் தலைமையில் காவல் சிறப்பு உதவி ஆய்வாளர் - அ.சா.1, முதல் நிலை காவலர் - அ.சா.2 ஆகியோர் ரோந்து சென்றபோது புஷ்பவனம் மாரியம்மன்கோவில் பகுதியில் எதிரிகள் நின்றிருந்த இடத்தை சோதனை செய்தபோது 60 லிட்டர் பிடிக்கக்கூடிய 2 பாலிதீன் பைகளில் சுமார் 55 லிட்டர் வீதம் 110 லிட்டர் எரிசாரயம் மற்றும் 2 பிளாஸ்டிக் கேனில் 95 லி வீதம் வெல்லம், படிகாரகற்கள், பேரீச்சை, கடுக்காய் போன்றவைகளை போட்டு எரிசாராயம் மண்ணில் புதைக்கப்பட்டிருந்தது. ஊறல் மூலப்பொருட்களை மகஜரில் கைப்பற்றியதாகவும், கைப்பற்றுதல் மகஜர் தயார் செய்து சாராயத்தினை கைப்பற்றியதாகவும், கேன்கள் மண்ணில் புதைத்த நிலையிலிருந்து எடுக்க முடியாத காரணத்தினால் 750 மிலி கண்ணாடி பாட்டில்களில் தலா 500 மிலி வீதம் மாதிரிகளை எடுத்துக்கொண்டு அவற்றை சம்பவஇடத்தில் கொட்டி அழித்ததாகவும், ஆய்வாளர் தன்னை

விசாரித்ததாகவும் சாட்சியமளித்துள்ளார். அ.சா.1 மூலமாக கைப்பற்றுதல் மகஜர் மற்றும் அழிப்பு மகஜர் ஆகியவற்றில் உள்ள கையொப்பங்கள் முறையே அ.சா.ஆ.1 மற்றும் அ.சா.ஆ.2 -ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. வேதாரண்யம் காவல் நிலைய முதல் நிலைக் காவலர் அ.சா.2 தனது முன் விசாரணையில் அ.சா.1யை ஒத்து சாட்சியமளித்துள்ளார். அ.சா.2 மூலமாக கைப்பற்றுதல் மகஜர் மற்றும் அழிப்பு மகஜர் ஆகியவற்றில் உள்ள கையொப்பங்கள் முறையே அ.சா.ஆ.3 மற்றும் அ.சா.ஆ.4 -ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.

4(2). இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரிக்கு பதிலாக விசாரிக்கப்பட்ட காவல் ஆய்வாளர் திரு. ஸ்ரீதர் - அ.சா.3 வேதாரண்யம் காவல் நிலைய ஆய்வாளரான பட்டியல் சாட்சி-3 திருமதி. சுப்ரியா என்பவருக்காக வழக்காவணங்களின் அடிப்படையில் சாட்சியமளித்துள்ளார். கடந்த 13.06.2021ம் தேதி மாலை 07.30 மணியளவில் வேதாரண்யம் காவல் நிலைய காவல் ஆய்வாளர் சுப்ரியா, காவல் சிறப்பு உதவி ஆய்வாளர்- அ.சா.1, முதல் நிலை காவலர் - அ.சா.2 ஆகியோர் ரோந்து சென்றபோது புஷ்பவனம் மாரியம்மன்கோவில் பகுதியில் எதிரிகள் நின்றிருந்த இடத்தை சோதனை செய்தபோது 60 லிட்டர் பிடிக்கக்கூடிய 2 பாலிதீன் பைகளில் சுமார் 55 லிட்டர் வீதம் 110 லிட்டர் எரிசாரயம் மற்றும் 2 பிளாஸ்டிக் கேனில் 95 லி வீதம் வெல்லம், படிகாரகற்கள், பேரீச்சை, கடுக்காய் போன்றவைகளை போட்டு எரிசாராயம் மண்ணில் புதைக்கப்பட்டிருந்தது. அதனை முகர்ந்து பார்த்தபோது விஷநெடியுடன்

கூடிய வாடை வீசியதால், பொதுமக்கள் யாரும் சாட்சிகளாக முன்வராத காரணத்தினால் மேற்படி தடயப்பொருளை கைப்பற்றுதல் மகஜரில் சாட்சிகள் அ.சா.1 மற்றும் அ.சா.2 முன்னிலையில் கைப்பற்றியதாகவும், மேற்படி தடயத்திலிருந்து 750 மிலி பிடிக்கக்கூடிய 2 கண்ணாடி பாட்டில்களில் 500 மிலி வீதம் மாதிரிக்கு எடுத்து, SHO சீல் வைக்கப்பட்டது என்றும், எஞ்சிய தடயப்பொருட்களை 32 TNP Act படி மேற்படி சம்பவ இடத்தில் கொட்டி அழித்துள்ளார். பின் கைப்பற்றிய தடயத்துடன் நிலையம் வந்து எதிரிகளுக்கு எதிராக வழக்கு பதிவு செய்துள்ளார். பின்பு அ.சா.3 விசாரணைக்கு பின் வழக்கின் சட்டப்பிரிவை 4(1)(aaa), 4(1)(g) r/w 4(1-A) TNP Act லிருந்து 4(1)(aaa), 4(1)(g) TNP Act ன் படி சட்டப்பிரிவு மாற்று அறிக்கை தாக்கல் செய்துள்ளார். கடந்த 15.08.2023 புலன் விசாரணையை முடித்து எதிரிகளின் மீது பிரிவுகள் 4(1)(aaa), 4(1)(g) TNP Act-ன் படி குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளார். அ.சா.3 மூலமாக கைப்பற்றுதல் மகஜர், அழிப்பு மகஜர், முதல் தகவல் அறிக்கை மற்றும் சட்டப்பிரிவு மாற்று அறிக்கை அ.சா.ஆ. 5 மற்றும் அ.சா.ஆ.8 -ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.

5. இத்துடன் அரசு தரப்பு சாட்சிய விசாரணை முடித்துக்கொள்ளப்பட்டது. அரசு தரப்பில் முன்னிலைப்படுத்தி விசாரணை செய்யப்பட்ட சாட்சிகளில், இவ்வழக்கு எதிரிகளுக்கு பாதகமாக அளிக்கப்பட்ட சாட்சிகளின் சாட்சியங்கள் குறித்து, 18.06.2026 ஆம் தேதி குவி.மு.ச பிரிவு 313(1)(ஆ)-ன் கீழ் இவ்வழக்கு எதிரிகளிடம்

எடுத்துக்கூறி விளக்கி விசாரணை மேற்கொள்ளப்பட்டது. அப்போது இவ்வழக்கு எதிரிகள் தங்களுக்கு எதிராக கூறப்பட்ட அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியம் பொய் என்றும், வழக்கு குறித்து விசாரணை மேற்கொள்ளப்பட்டபோது பொய் வழக்கு என்றும் மறுத்துரைத்தார்கள். எதிரிகள் தரப்பில் சாட்சிகள் இல்லை என கூறப்பட்டு, சாட்சிகள் யாரும் விசாரிக்கப்படவில்லை.

6. எனவே, எதிரிகளுக்கு எதிராக பிரிவுகள் 4(1)(aaa), 4(1)(g) TNP Act-ன் கீழாக சாட்டப்பட்ட குற்றச்சாட்டுகள் அரசு தரப்பில் சந்தேகங்களுக்கிடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா? என்பதே தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சினையாகும்.

7. இரு தரப்பு வாதம் கேட்கப்பட்டது. அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களும் சான்றாவணங்களும் பரிசீலிக்கப்பட்டது.

8(1). அ.சா.3 ஸ்ரீதர் தனது சாட்சியத்தில் இவ்வழக்கில் காவல்துறையில் பணிபுரிந்த வகையில் ஆய்வாளர் சுப்ரியா அவர்களின் கையொப்பம் தனக்கு நன்கு தெரியும் என்றும், கடந்த 13.06.2021 ஆம் தேதி 19.30 மணிக்கு வேதாரண்யம் சிறப்பு உதவி ஆய்வாளர் சுப்பிரமணியன், முதல் நிலைக் காவலர் பால்ராஜ் மற்றும் காவல் ஆய்வாளர் சுப்ரியா ஆகியோர் , வேதாரண்யம் காவல் சரகம், புஷ்பவனம் மாரியம்மன் கோவில் பகுதிகளில் ரோந்து சென்று, கண்காணித்து வந்தபோது, சந்தேகப்படும்படியாக நின்று கொண்டிருந்த நபர்கள் பின்னர் பெயர் விலாசம் கேட்டு தெரிந்து கொண்ட

புஷ்பவனம் முத்துக்கவுண்டர் காட்டைச் சேர்ந்த தேசிங்கு, த/பெ முனியப்பன், வீரமணி, த/பெ. குப்புசாமி ஆகியோர்கள் போலீசாரை கண்டதும், தப்பி ஓடி தலைமறைவாகிவிட்டதாகவும், பின் அவர்கள் நின்றிருந்த இடத்தை சோதனை செய்தபோது சுமார் 60 லி. பிடிக்கக்கூடிய 2 பாலிதீன் பைகளில் சுமார் 55 லி. வீதம், மொத்தம் 110 லி. எரிசாராயம் இருந்ததாகவும், அருகில் இருந்த பிளாஸ்டிக் பைகளில் 95 லி. வீதம் வெல்லம், படிகாரக் கற்கள், பேரீச்சை, கடுக்காய் தூள் போன்றவைகளை போட்டு, நொதிக்க வைத்த எரிசாராய ஊரல் மண்ணில் புதைக்கப்பட்ட நிலையில் இருந்ததாகவும், மேற்படி சாராயத்தை தொட்டு நுகர்ந்து பார்த்தபோது விஷ நெடியுடன் கூடிய வாடையும், கண்ணெரிச்சலையும், குமட்டலையும் உண்டுபண்ணியதாகவும், மேற்படி நபர்கள் விற்பனைக்காக எரிசாராயத்தை வைத்திருந்ததாகவும், எரிசாராயம் காய்ச்சுவதற்கு தேவையான மூலப்பொருட்களை மொத்தமாக ஊரல் போட்டு நொதிக்க வைத்திருந்தது தெரிய வந்ததாகவும் குற்றம் சாட்டப்பட்டுள்ளது. மேற்படி, எதிரிகள் விட்டுச்சென்ற எரிசாராயம் மற்றும் சாராயம் தயாரிக்க ஆயத்தமாக வைத்திருந்த மூலப்பொருட்களை மகஜரில் கைப்பற்றி, பொதுமக்கள் யாரும் சாட்சியம் அளிக்க முன் வராததால், போலீசாராகிய தங்கள் முன்னிலையில் மேற்படி தடயத்தை 20.00 மணிக்கு கைப்பற்றுதல் மகஜர் தயார் செய்து கைப்பற்றியும், மேற்படி எரிசாராயத்திலிருந்து தலா 750 மி.லி. பிடிக்கக்கூடிய 2 கண்ணாடி பாட்டில்களில் தலா 500 மி.லி. வீதம் மாதிரிக்கு எடுத்து, SHO சீல் வைத்து , எஞ்சிய தடயமான 109 லி. எரிசாராயம் மற்றும் மண்ணில் புதைக்கப்பட்ட நிலையில் இருந்த இரண்டு

பேரல்களில் வெளியே எடுக்க முடியாததால் பிரிவு 32 TNP Act படி 21.00 மணிக்கு அழிப்பு மகஜர் தயார் செய்து, சம்பவ இடத்திலேயே பாதுகாப்பாக உடைத்து, அழித்து, கைப்பற்றிய தடயத்துடன் 21.30 மணிக்கு நிலையம் வந்து, தலைமறைவு எதிரிகள் மீது U/s. 4(1)(aaa), 4(1)(g) r/w 4(1-A) TNP Act-இன் கீழ் வழக்கு பதிவு செய்ததாகவும், பின்பு மேற்படி சாராயத்தை அருந்தி உடலுக்கு பாதிப்பு ஏற்பட்டு தனியார் மற்றும் அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெறவில்லை என்பதாலும், யாருக்கும் பக்கவிளைவோ உயிர்சேதமோ ஆகவில்லை என்பதாலும் இவ்வழக்கின் சட்டப்பிரிவை U/s. 4(1)(aaa) , 4(1)(g) TNP Act-ஆக மாற்றி சட்டப்பிரிவு மாற்று அறிக்கை தாக்கல் செய்ததாகவும், பின்பு எதிரிகள் மீதான விசாரணை முடித்து 15.08.2023 அன்று எதிரிகள் மீது இறுதியறிக்கை தாக்கல் செய்ததாகவும் சாட்சியமளித்துள்ளார்.

8(2). இவ்வழக்கில் அ.சா.1 மற்றும் அ.சா.2 ஆகியோர், கைப்பற்றுதல் மகஜர் மற்றும் அழித்தல் மகஜரில் சாட்சிகளாக இருந்து கையொப்பம் செய்த சாட்சிகளாக விசாரணை செய்யப்பட்டுள்ளனர். அ.சா.1 தனது சாட்சியத்தில், கடந்த 13.06.2023 அன்று மாலை 07.30 மணியளவில், காவல் ஆய்வாளர் தலைமையில், முதல்நிலைக் காவலர் பால்ராஜ் ஆகியோருடன் புஷ்பவனம் மாரியம்மன் கோவில் பகுதியில் ரோந்து சென்றபோது, எதிரிகள் இருவரும் தங்களை பார்த்து தப்பி ஓடியதாகவும், அவர்கள் நின்ற இடத்தை சோதனை செய்தபோது சுமார் 60 லி. பிடிக்கக்கூடிய 2 பாலிதீன்

பைகளில் சுமார் 55 லி. வீதம், மொத்தம் 110 லி. எரிசாராயம் இருந்ததாகவும், அருகில் இருந்த பிளாஸ்டிக் கேனில் 95 லி. வீதம் வெல்லம், படிகாரக் கற்கள், பேரீச்சை, கடுக்காய் போன்றவைகளை போட்டு, எரிசாராயம் மண்ணில் புதைக்கப்பட்டு இருந்ததாகவும், அவற்றை திறந்து பார்த்தபோது மெஷினரியுடன் கூடிய எரிசாராயம் மற்றும் சாராயம் தயாரிக்க காய்ச்சி வைத்திருந்தது தெரிய வந்ததாகவும், மேற்படி ஊரல் பொருட்களை மகஜரில் கைப்பற்றியதாகவும், மகஜரில் உள்ள முதல் கையெழுத்து தன்னுடையது என்றும், மண்ணில் புதைத்த நிலையிலிருந்து மேற்படி கேன்களை எடுக்க முடியாத காரணத்தினால் 750 மி.லி. கண்ணாடி பாட்டில்களில் தலா 500 மி.லி. வீதம் மாதிரிகளுக்கு எடுத்துக் கொண்டு, அவற்றை அங்கேயே அழித்து, அழிப்பு மகஜர் தயார் செய்ததாகவும், அழிப்பு மகஜரில் உள்ள 1-வது கையெழுத்து தன்னுடையதுதான் என்றும் சாட்சியமளித்துள்ளார்.

8(3). அ.சா.2 தனது சாட்சியத்தில், கடந்த 13.06.2023 அன்று மாலை 07.30 மணியளவில், காவல் ஆய்வாளர் தலைமையில், முதல்நிலைக் காவலர் பால்ராஜ் ஆகியோருடன் புஷ்பவனம் மாரியம்மன் கோவில் பகுதியில் ரோந்து சென்றபோது, எதிரிகள் இருவரும் தங்களை பார்த்து தப்பி ஓடியதாகவும், அவர்கள் நின்ற இடத்தை சோதனை செய்தபோது சுமார் 60 லி. பிடிக்கக்கூடிய 2 பாலிதீன் பைகளில் சுமார் 55 லி. வீதம், மொத்தம் 110 லி. எரிசாராயம் இருந்ததாகவும், அருகில் இருந்த பிளாஸ்டிக் கேனில் 95 லி. வீதம் வெல்லம், படிகாரக் கற்கள், பேரீச்சை, கடுக்காய் போன்றவைகளை

போட்டு, எரிசாராயம் மண்ணில் புதைக்கப்பட்டு இருந்ததாகவும், அவற்றை திறந்து பார்த்தபோது மெஷினரியுடன் கூடிய எரிசாராயம் மற்றும் சாராயம் தயாரிக்க காய்ச்சி வைத்திருந்தது தெரிய வந்ததாகவும், மேற்படி ஊரல் பொருட்களை மகஜரில் கைப்பற்றியதாகவும், மகஜரில் உள்ள இரண்டாவது கையொப்பம் தன்னுடையது என்றும், மண்ணில் புதைத்த நிலையிலிருந்த மேற்படி கேன்களை எடுக்க முடியாத காரணத்தினால் 750 மி.லி. கண்ணாடி பாட்டில்களில் தலா 500 மி.லி. வீதம் மாதிரிகளுக்கு எடுத்துக் கொண்டு, அவற்றை அங்கேயே அழித்து, அழிப்பு மகஜர் தயார் செய்ததாகவும், அழிப்பு மகஜரில் உள்ள 2-வது கையெழுத்து தன்னுடையது தான் என்றும் சாட்சியமளித்துள்ளார்.

9(1). இவ்வழக்கில் அ.சா.3-இன் சாட்சியத்திற்கு ஆதரவாக அ.சா.1 மற்றும் அ.சா.2-இன் சாட்சியங்கள் அமைந்துள்ள போதிலும், அ.சா.1 மற்றும் அ.சா.2 எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணையில், தங்களால் கையொப்பம் செய்யப்பட்ட கைப்பற்றுதல் மகஜரில், மேற்படி சாராயம் தயாரிப்பதற்கு உண்டான வெல்லம், படிகாரக்கற்கள், கடுக்காய், பேரீச்சை ஆகியவற்றை கைப்பற்றவில்லை என்றும், அதனை அழித்துவிட்டோம் என்றும், மேற்படி அழித்துவிட்டதாக சொன்ன பொருட்களை அழிப்பு மகஜரில் குறிப்பிடவில்லை என்றும், இவ்வழக்கின் தடயப்பொருட்களை நீதிமன்றத்தில் ஒப்படைக்கவில்லை என்றும் சாட்சியமளித்துள்ளார். மேலும், அ.சா.2 தனது சாட்சியத்தில், மேற்படி இவ்வழக்கு தொடர்பாக கைப்பற்றப்பட்ட கைப்பற்றுதல்

மகஜரில் தனி நபர்களை சாட்சியாக சேர்த்து, கையொப்பம் பெறப்படவில்லை என்றும், எரிசாராயம் தயார் செய்வதற்கு தேவையான விஷ நெடியுள்ள மூலப்பொருட்களை மாதிரிக்காக எடுக்கவில்லையென்றும், கைப்பற்றப்பட்ட எரிசாராயத்தை பகுப்பாய்விற்கு அனுப்பப்படவில்லை என்றும், கைப்பற்றப்பட்ட சாராயத்தை சம்பவ இடத்திலேயே வைத்து, சீல் செய்ததாகவும், தன்னுடன் பணிபுரியும் சிறப்பு உதவி ஆய்வாளர் சுப்பிரமணியன் என்பவரும் அதில் கையொப்பம் செய்ததாகவும், மேற்படி கைப்பற்றப்பட்ட மூலப்பொருட்களை அழிப்பதற்கு நீதிமன்றத்தில் உத்தரவு பெறப்படவில்லை என்றும் சாட்சியம் அளித்துள்ளனர். இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரியான அ.சா.3 தனது சாட்சியத்தில், இவ்வழக்கில் கைப்பற்றப்பட்ட மாதிரிகளை பகுப்பாய்விற்கு அனுப்பவில்லை என்றும், 110 லி. எரிசாராயம் அழித்ததாக சொல்லப்பட்டுள்ள நிலையில், அவ்வாறு அழிக்கப்பட்ட போது ஏதேனும் புகைப்படம் எடுத்து தாக்கல் செய்யவில்லை என்றும், இவ்வழக்கில் போலீசார் சாட்சிகளை தவிர தனிப்பட்ட நபர்கள் சாட்சிகளாக சேர்க்கப்படவில்லை என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

9(2). ஆகவே, அ.சா.1 முதல் 3 சாட்சிகளின் சாட்சியங்கள் எதிரிகள் மீது அரசு தரப்பில் சுமத்தப்பட்டுள்ள குற்றப்பிரிவு U/s. 4(1)(aaa) , 4(1)(g) TNP Act-இன் கீழ் போதுமான சாட்சியங்களாக அமையவில்லை என இந்நீதிமன்றம் கருதுகிறது. இவ்வழக்கில், சாட்சியாக சேர்க்கப்பட்ட அனைவரும் காவல்துறையை சேர்ந்தவர்கள். இவ்வழக்கில்

தனிநபர்கள் யாரும் சாட்சியாக சேர்க்கப்படவில்லை. ஏன் தனிநபர்கள் சாட்சியாக சேர்க்கப்படவில்லை என்ற காரணமும் அரசு தரப்பு வழக்கில் சொல்லப்படவில்லை. ஆகவே மேற்படி பொருண்மைகள் அரசு தரப்பு வழக்கின் மீது மிகுந்த சந்தேகத்தை ஏற்படுத்தும் வகையில் உள்ளது என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

10. மேலும், இவ்வழக்கில் எதிரிகளிடமிருந்து கைப்பற்றப்பட்டதாக சொல்லப்படும் பொருள் சாராயம் தான் என நிரூபிக்கும் பொருட்டு கைப்பற்றப்பட்ட தடயப்பொருளை இந்நீதிமன்றத்தில் ஒப்படைத்து தடயப்பொருளாக்கப்படவும் இல்லை மற்றும் பகுப்பாய்வுக்கும் அனுப்பப்படவில்லை. ஆகவே எதிரிகளிடம் கைப்பற்றப்பட்டது சாராயம் தான் என்பதை நிரூபிக்கும் வகையில் அரசு தரப்பு வழக்கில் எந்த ஆதாரமும் இல்லை. மேலும் இவ்வழக்கில் பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்யப்படவில்லை. பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் ஏன் தயார் செய்யப்படவில்லை என்ற காரணமும் அரசு தரப்பில் சொல்லப்படவில்லை.

11. இறுதியாக, எதிரிகளுக்கு எதிரான பிரிவுகள் U/s. 4(1)(aaa) , 4(1)(g) TNP Act -ன் கீழான குற்றச்சாட்டுகள் அரசு தரப்பில் நிரூபிக்கப்படவில்லை என்பதால், எதிரிகளை குற்றவாளிகள் இல்லை என இந்நீதிமன்றம் முடிவு செய்தும், எதிரிகளை கு.வி.மு.ச பிரிவு 248(1)-ன் கீழ் விடுதலை செய்தும் இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கின்றது.

12. இவ்வழக்கில் எதிரிகள் மற்றும் எதிரிகளின் ஜாமின்தாரர்கள் எழுதிக் கொடுத்த

பிணை ஆவணங்களை மேல் முறையீட்டு காலத்திற்கு பிறகு ரத்து செய்ய உத்தரவிடப்படுகின்றது. இவ்வழக்கில் சான்று பொருட்கள் ஏதும் கைப்பற்றப்படவில்லை.

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து - தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு பிறகு என்னால் பிழைத்திருத்தம் செய்யப்பட்டு, இன்று 2026 ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 29 ஆம் நாள் இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

(ஒப்பம்..........G. சுதா, B.Sc., B.L.,)
மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல்
நடுவர், வேதாரண்யம்.(மு.கூ.பொ.)

**இணைப்பு :**

**அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகள் :**

அ.சா.1. : திரு. சுப்பிரமணியன், வேதாரண்யம் காவல் நிலைய சிறப்பு உதவி ஆய்வாளர்.

அ.சா.2. : திரு. பால்ராஜ், வேதாரண்யம் காவல் நிலைய தலைமை காவலர்.

அ.சா.3. : திரு. ஸ்ரீதர், வேதாரண்யம் காவல் நிலைய ஆய்வாளர்.

**அரசு தரப்பில் குறியீடுசெய்யப்பட்ட சான்றாவணங்கள் :**

அ.சா.ஆ.1. : 13.06.2021 : கைப்பற்றுதல் மகஜரிலுள்ள அ.சா.1 னின் கையொப்பம்

அ.சா.ஆ.2 : 13.06.2021 : அழிப்பு மகஜரிலுள்ள அ.சா.1 னின் கையொப்பம்

அ.சா.ஆ.3 : 13.06.2021 : கைப்பற்றுதல் மகஜரிலுள்ள அ.சா.2 னின் கையொப்பம்

அ.சா.ஆ.4 : 13.06.2021 : அழிப்பு மகஜரிலுள்ள அ.சா.2 னின் கையொப்பம்

அ.சா.ஆ.5 : 13.06.2021 : கைப்பற்றுதல் மகஜர்

அ.சா.ஆ.6 : 13.06.2021 : அழிப்பு மகஜர்

அ.சா.ஆ.7 : 13.06.2021 : முதல் தகவல்அறிக்கை

அ.சா.ஆ.8 : 15.08.2023 : சட்டப்பிரிவு மாற்று அறிக்கை

**அரசு தரப்பில் குறியீடுசெய்யப்பட்ட சான்று பொருள்: இல்லை.**

**எதிரிகள் தரப்பு சாட்சிகள், சான்றாவணங்கள், சான்று பொருட்கள் : இல்லை.**

(ஒப்பம்..........G. சுதா, B.Sc., B.L.,)
மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல்
நடுவர், வேதாரண்யம்.(மு.கூ.பொ.)

**நகல் - மாண்புமிகு தலைமை நீதித்துறை நடுவர், நாகப்பட்டினம் அவர்களுக்கு பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.**

1. இந்த தீர்ப்புரையின் முடிவு காவல்துறையினருக்கு தெரிவிக்கப்பட்டது.

2. இந்த வழக்கில் எந்த சாட்சியும் விசாரணைக்காக 3 நாட்களுக்கு மேல் நிறுத்தி வைக்கப்படவில்லை.

3. இந்த வழக்கின் எதிரிகள் வழக்கு விசாரணையின் போது பிணையில் இருந்தார்கள்.

4. இந்த வழக்கில் சான்று பொருட்கள் ஏதும் கைப்பற்றப்படவில்லை.